| மாநகர்மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் 28.03.2025ம் | <u>மார்ச் மாதம் அவசரக் கூட்ட தீர்மானம்</u><br>வரிசை எண் | மாமன்ற தீர்மான எண் |
|---|---|---|
| | கும்பகோணம் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர் திரு.ஜெ.நடராஜன் அவர்கள் கீழ்கண்டவாறு தனித்தீர்மானத்தினை கொண்டு வந்தார்.<br>30.12.2024 அன்று நடைபெற்ற குடந்தை மாமன்ற கூட்டத்தில் மாநிலங்களவை உறுப்பினர் தஞ்சை வடக்கு மாவட்ட கழக செயலாளர் அண்ணன் திரு.சு.கல்யாணசுந்தரம் அவர்களால் சிறப்பு தீர்மானமாக பரிந்துரைக்கப்பட்ட பொருள் – 1 ன் படி கும்பகோணம் மாநகரத்திற்கு புதிய பேருந்து நிலையம் அமைய ஆணை பிறப்பித்த மாண்புமிகு கழகத்தலைவர் திராவிட நாயகன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்களுக்கும் பரிந்துரை செய்த மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கோ.வி.செழியன் அவர்களுக்கும், கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை திரு.க.அன்பழகன் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிகிறேன். இந்த நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை நிறைவேற்றிட வேண்டுகிறேன். தீர்மானத்தை மாமன்றத்தில் நிறைவேற்றி தந்த வணக்கத்துக்குரிய மேயர், துணை மேயர் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி.<br>மேற்கண்ட தீர்மானத்தினை மாமன்ற உறுப்பினர் திரு.ஜெ.நடராஜன் அவர்கள் முன்மொழிய மதிப்பிற்குரிய மேயர், துணை மேயர் மற்றும் மதச்சார்பற்ற அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. | 372.<br>தீர்மானத்தினை மாமன்ற உறுப்பினர் திரு.ஜெ.நடராஜன் அவர்கள் முன்மொழிய மதிப்பிற்குரிய மேயர், துணை மேயர் மற்றும் மதச்சார்பற்ற அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. |
| | கும்பகோணம் மாநகராட்சி துணைமேயர் திரு.சு.ப.தமிழழகன் அவர்கள் கீழ்கண்டவாறு தீர்மானத்தினை கொண்டு வந்தார்.<br>இஸ்லாமியர்களிடம் இருந்து எந்தக் கோரிக்கையும் எழாத நிலையில் ஒரேயடியாகப் பல திருத்தங்களை மேற்கொண்டு வக்பு அமைப்பின் செயல்பாட்டையே முடக்கும் நோக்குடன் ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டுவரவுள்ள வக்பு வாரிய சட்டத்திருத்த மசோதாவை ஒன்றிய அரசு கைவிடக் கோரும் தனித் தீர்மானத்தை முன்மொழிந்த மாண்புமிகு **தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களுக்கு இம்மாமன்றம் நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.<br>மேற்கண்ட தீர்மானத்தினை துணைமேயர் திரு.சு.ப.தமிழழகன் அவர்கள் முன்மொழிய மேயர் மற்றும் மதச்சார்பற்ற அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. | 373<br>தீர்மானத்தினை துணைமேயர் திரு.சு.ப.தமிழழகன் அவர்கள் முன்மொழிய மேயர் மற்றும் மதச்சார்பற்ற அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. |
| | கும்பகோணம் மாநகராட்சி துணைமேயர் திரு.சு.ப.தமிழழகன் அவர்கள் கீழ்கண்டவாறு தீர்மானத்தினை கொண்டு வந்தார்.<br>சுதந்திர இந்திய வரலாற்றில் முதன்முறையாகக் கூட்டாட்சியை தத்துவத்தை பாதுகாக்க, பாதிப்புக்குள்ளாகும் மாநிலங்களை சேர்ந்த முதலமைச்சர்கள், துணை முதலமைச்சர், பல்வேறு அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை ஒருங்கிணைத்து, மாநிலங்களின் உரிமைகளை காக்கும் வகையில் நாடாளமன்ற தொகுதி மறுசீரமைப்பை நியாயமான முறையில் செய்ய வேண்டுமென்றும், மாநிலங்களின் பிரதிநிதிகளை கொண்ட கூட்டு நடவடிக்கைக் குழு கூட்டம் நடத்தியும், இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றியும் தந்த, **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களுக்கு இம்மாமன்றம் நன்றியினையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறது.<br>மேற்கண்ட தீர்மானத்தினை துணைமேயர் திரு.சு.ப.தமிழழகன் அவர்கள் முன்மொழிய மேயர் மற்றும் மதச்சார்பற்ற அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. | 374<br>தீர்மானத்தினை துணைமேயர் திரு.சு.ப.தமிழழகன் அவர்கள் முன்மொழிய மேயர் மற்றும் மதச்சார்பற்ற அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் வழிமொழிய தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. |

மேயர்
கும்பகோணம் மாநகராட்சி